இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

அடிப்படை வசதிகள்

***1423 திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, குன்றாண்டார் கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"அமைதி, வளம், வளர்ச்சி" என்றத் தாரக மந்திரத்துடன் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழகத்தினை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்குக் கொண்டுவர எடுத்த ஆற்றல்மிக்க நடவடிக்கைகளினால், 2014 ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டிலும் நமது மாநிலம், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், இந்தியாவில் முதல் இடத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் பெருமைகொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

2016 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, அருள்மிகு குன்றாண்டார் கோயில் மற்றும் சிவன் கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், அங்கு அடிப்படை வசதிகள் தேவைப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம் அம்மா; தங்கத் தாரகை அம்மா; தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை, அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருபுறம் காவேரி, மறுபுறம் கொள்ளிடம் நடுவினில் ஸ்ரீரங்கத்தில் தீபமாக உதித்த தமிழகத்தின் குலவிளக்கு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நாளை இந்திய தீபகற்பத்திற்கே வழிகாட்டப் போகும் ஒளிவிளக்கு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று கோட்டை கொத்தளத்தில் 70-வது சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை தன் புனித திருக்கரங்களால் ஏற்றிவைத்து, 'மனிதனின் உண்மையான சுதந்திரம், விடுதலை பொருளாதாரத்தில்தான் உள்ளது' என வீர முழக்கமிட்ட எங்கள் உயிர் ஆதாரமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் உயர்விற்கு அல்லும் பகலும் அயராது உழைக்கும் கருணையின் மறு அவதாரமே! தமிழகத்தின் முதல்வர், தங்கத் தாரகை, டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, சிரம் தாழ்த்தி வணங்கி, எனது கேள்வியைத் துவங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி, குன்றாண்டார் கோயில் மற்றும் சிவன் கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?" என்ற கேள்விக்கு,

"மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுப்பார்கள்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி, மலையடிப்பட்டிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை தொகுதியிலே நார்த்தாமலையில் அமைந்துள்ள விஜயாலய சோழீஸ்வரம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னத்தைப் பார்வையிட வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மலைக்கோயிலுக்குச் செல்லும் நடைபாதையைச் சீரமைத்தல், நவீன கழிப்பறை கட்டுதல் மற்றும் குடிநீர் வசதி செய்தல் முதலியவற்றிற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுலா ஆணையரின் பரிந்துரையுடன், சுற்றுலாத் துறையின்மூலம் நிதிநிலைக்கேற்ப ஒப்பளிப்பு வழங்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*